


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஏப்ரல். 05, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 180 ❖ ரூ.10

### வரலாறு பாடப் புத்தகத்தில் இருந்து முகலாயர்கள் பகுதி நீக்கப்படவில்லை

# விளக்கம்

## மாணவர்களுக்கான பாடச்சுமையை குறைக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. நாங்கள் அதனை அமல்பபடுத்துகிறோம்: NCERT இயக்குநர் தினேஷ் பிரசாத் சக்லானி

**புதுடெல்லி, ஏப். 05**

**வரலாறு பாடப் புத்தகத்தில் இருந்து முகலாயர்கள் பகுதி நீக்கப்படவில்லை என்று NCERT இயக்குநர் தினேஷ் பிரசாத் சக்லானி தெரிவித்துள்ளார்.**



வரும் 2023-24 கல்வி ஆண்டு முதல் கற்பிக்கப்பட இருக்கும் 12ம் வகுப்பு மாணவர்களுக்காக NCERT தயாரித்துள்ள புதிய வரலாற்று பாடப்புத்தகத்தில் இருந்து முகலாயர்களின் வரலாறு நீக்கப்பட்டதாக செய்தி வெளியானது. இந்நிலையில், இது குறித்து NCERT-ன் இயக்குநர் தினேஷ் பிரசாத் சக்லானி கூறி இருப்பதாவது: ''12ம் வகுப்பு மாணவர்களுக்காக NCERT தயாரித்துள்ள வரலாற்று பாடப்புத்தகத்தில் இருந்து முகலாயர்கள் வரலாறு நீக்கப்பட்டதாக வெளியான தகவல் உண்மையல்ல. அது ஒரு பொய்.

கரோனா தொற்று காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கில் கடந்த ஆண்டு பாடத்திட்டங்களை குறைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதற்காக ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அளித்த பரிந்துரையில், மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான பாடங்களை நீக்கக் கூடாது என்றும், சுமையாக உள்ள பகுதிகளை நீக்கலாம் என்றும் தெரிவித்தது.

தேசிய கல்விக் கொள்கையின் வழிகாட்டல்படி நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். மாணவர்களுக்கான பாடச்சுமையை குறைக்க வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. நாங்கள் அதனை அமல்பபடுத்துகிறோம். பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. அது விரைவில் இறுதி செய்யப்படும்.

தேசிய கல்விக் கொள்கையின்படி பாடப்புத்தகங்கள் 2024-ல் அச்சிடப்படும். தற்போதைக்கு நாங்கள் எதையும் கைவிடவில்லை. முகலாயர்களின் வரலாற்றை பாடப் புத்தகத்தில் இருந்து NCERT நீக்கிவிட்டதாக எழுந்துள்ள விவாதம் தேவையற்றது. இது குறித்து தெரியாதவர்கள், பாடப் புத்தகத்தைப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று NCERT இயக்குநர் தினேஷ் பிரசாத் சக்லானி தெரிவித்துள்ளார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லவன் சாலையில் 1100 மீட்டர் நீளத்திற்கு 15. 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வின் போது அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராச்சாமி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடக்க நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன், மாநகராட்சி ஆணையர் சிங் பேடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## பொன்னமராவதி மற்றும் திருமயம் ஒன்றியப் பகுதிகளில் புதிய மின்மாற்றிகளை அமைச்சர் ரகுபதி துவக்கி வைத்தார்

**பொன்னமராவதி , ஏப். 05**

பொன்னமராவதி மற்றும் திருமயம் ஒன்றியப் பகுதிகளில் குறைவான மின் அழுத்தத்தை சரிசெய்யும் வகையில் புதிய மின்மாற்றிகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஒன்றியம், தேனூர் ஊராட்சி, ஏம்பல்பட்டி மற்றும் திருமயம் ஒன்றியம், வி.லெட்சுமிபுரம் ஊராட்சி, ஒத்தவீடு அருகில் புதிய மின்மாற்றிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகள் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி தலைமையில் நடைபெற்றது. பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி இன்றையதினம் பொன்னமராவதி மற்றும் திருமயம் ஒன்றியப் பகுதிகளில் குறைவான மின் அழுத்தத்தை சரிசெய்யும் வகையில் புதியமின்மாற்றிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பொன்னமராவதி ஒன்றியம், தேனூர் ஊராட்சி, ஏம்பல்பட்டி கிராமத்தில் குறைவான மின் அழுத்தத்தினை சரிசெய்யும் வகையில் ரூ.8,57,200 செலவில் 63KVA/11KV புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் எம்பல்பட்டி கிராமத்தில் உள்ள 70 வீட்டு மின் இணைப்புகள், 10 விவசாய பம்பு செட்டுகள் மற்றும் 4 மூர்வு மின் இணைப்புகளுக்கு நிறைவான மின் அழுத்தம் வழங்கப்படும். திருமயம் ஒன்றியம், நச்சாந்துப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்குட்பட்ட உயர்நிலை நீர்த்தேக்க தொட்டி மின்விசை கூடுதல் மோட்டார் பம்பு அமைப்பதற்கு ரூ.6,32,870 செலவில் 63KVA/11KV புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் லெட்சுமிபுரம் மற்றும் ஒத்தவீடு சுற்று வட்டார பகுதிகளில் உள்ள 50 வீட்டு மின் இணைப்புகள், 10 விவசாய மின் இணைப்புகள், 1 குடிநீர் தேக்க தொட்டிக்கு நிறைவான மின் அழுத்தம் வழங்கப்படும். எனவே தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலன் கருதி புதிய மின்மாற்றியின் மூலம் வழங்கப்படும் மின்சாரத்தினை பொதுமக்கள் உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, வருவாய் கோட்டாட்சியர்கள் முருகேசன் (புதுக்கோட்டை), குழந்தைசாமி (இலுப்பூர்), செயற்பொறியாளர் எம். ஆனந்தாய், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உதவி செயற்பொறியாளர்கள் ராமநாதன் (திருமயம்), ஆர்.முத்துச்சாமி (பொன்னமராவதி), வட்டாட்சியர்கள் பிரகாஷ் (பொன்னமராவதி), புவியரசன் (திருமயம்), வட்டார வளர்ச்சி அலுவலர் சதாசிவம், ஊராட்சிமன்றத் தலைவர்கள் கிரிதரன் (தேனூர்), ராமசாமி (வி. லெட்சுமிபுரம்), உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

இல்லாததை
நினைத்து ஏங்காமல்
இருப்பதைவைத்து
வாழ கற்றுக்கொள்ள
வேண்டும்




# அரியலூரில் நகராட்சி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது



அரியலூர், ஏப். 5-

அரியலூர் நகராட்சி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. அரியலூர் நகராட்சி கூட்ட மன்றத்தில் நடைபெற்ற, நகராட்சி கவுன்சிலர்களின் அவசர கூட்டத்திற்கு, நகராட்சித் தலைவர் சாந்திகலைவாணன் தலைமை வகித்தார், ஆணையர் பொறுப்பு தமயந்தி முன்னிலை வகித்தார், இளநிலை உதவியாளர் செந்தில்குமார் தீர்மானங்களை படித்தார்.

அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு, காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்காக, 25 லட்ச ரூபாய் மதிப்பில் சமையல் கூடம் கட்டுவது.

அரியலூர் நகராட்சிக்கு, 7.80 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்படுவதை முன்னிட்டு, தற்காலிக பேருந்து நிலையம் அமைய உள்ள, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இடத்துக்கு, மாத வாடகையாக 49,000 ரூபாய் வழங்குவது.

அரியலூர் நகராட்சிக்கு அமைக்கப்பட உள்ள தற்காலிக பேருந்து நிலைய வளாகத்தில், பயணிகளுக்கான தற்காலிக நிழல் குடை, அதன் தெற்கு பகுதியில் ரூபாய் 6.20 லட்சம் செலவில் பொது நிதியிலிருந்து கட்டுவது, தற்காலிக பேருந்து நிலையத்திற்கான கழிவறை, ரூபாய் 6.40 லட்சம் மதிப்பில் கட்டுவது. தற்காலிக பேருந்து நிலைய வளாகத்தில் ரூபாய் 6.40 லட்சம் மதிப்பில் கழிவறைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்துவது, ரூபாய் பத்து லட்சம் செலவில் மின்விளக்கு வசதி ஏற்படுத்துவது. ரூபாய் 1.40 லட்சம் மதிப்பில், தற்காலிக பேருந்து நிலைய வளாகத்தில் கிராவல் மண் கொட்டுவது உள்பட, 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில், அரியலூர் நகராட்சி மேலாளர் சரஸ்வதி, நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, மற்றும் நகராட்சி கவுன்சிலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியத்தில் திமுக உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம்



கள்ளக்குறிச்சி, ஏப்,05_

திமுக தலைவர் ஸ்டாலின் தமிழகம் முழுவதும் ஒரு கோடி உறுப்பினர்களை திமுக-வில் இணைக்க வேண்டுமென திமுக நிர்வாகிகளுக்கு கட்டளையிட்டுள்ளார், இதன் ஒரு பகுதியாக, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் உள்ள திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் திமுக உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம் ஆனத்தூர் ஊராட்சியில் நடைபெற்றது. இம்முகாம் திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட குழு உறுப்பினருமான சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திமுக உறுப்பினர்களை சேர்க்கும் படிவத்தை வழங்கி முகாமை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் ஆண்கள், பெண்கள் என ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, திமுக உறுப்பினர் படிவத்தில் கையொப்பமிட்டு தங்களை திமுக உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது ஒன்றிய அவைத்தலைவர் கலிவரதன், பொருளாளர் மைக்கேல், ஒன்றியக்குழு உறுப்பினர் ராஜி வி பழனிவேல், ஒன்றிய துணைச் செயலாளர் வீராசாமி, மாவட்ட பிரதிநிதி ராஜேஷ்கண்ணா, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ரவிபிரபாகரன், கிளைக் திமுக நிர்வாகிகள் மணிமாறன், கோ தண்டராமன், மாவட்ட ஆதி திராவிடர் அணி துணை அமைப்பாளர் அய்யனார் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# திருவண்ணாமலையில் பவுர்ணமி கிரிவலம் இன்று தொடங்குகிறது



தி.மலை, ஏப்.5-

திருவண்ணாமலையில் இந்த மாதத்திற்கான பவுர்ணமி கிரிவலம் 05-ந் தேதி (இன்று) காலை தொடங்குகிறது. திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் இக்கோவில் பின்புறம் உள்ள அண்ணாமலை என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.

இந்த நிலையில், பங்குனி மாதத்திற்கான பவுர்ணமி கிரிவலம் இன்று (புதன்கிழமை) காலை 10.16 மணிக்கு தொடங்கி நாளை 6-ந் தேதி (வியாழக்கிழமை) காலை 10.56 மணிக்கு நிறைவடைகிறது. இந்த நேரத்தில் பக்தர்கள் கிரிவலம் செல்லலாம் என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். பவுர்ணமியை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

# புளியங்குடியில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பங்குனி உத்தர திருவிழா பெரிய தேரோட்டம்



தென்காசி, ஏப்.5-

புளியங்குடியில் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் பங்குனி மாத உத்தர திருவிழா பெரிய தேரோட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு வந்து ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி தேரை பக்தர்கள் இழுத்து நான்கு ரத வீதியில் சென்று நிலையத்திற்கு இழுத்து வரப்பட்டது.

இத்திருவிழாவில் புளியங்குடிக்கு அருகில் உள்ள 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்டு சுப்பிரமணியசுவாமி அருள் பெற்று சென்றனர், மேலும் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட இனிய பண்பாளர், ஆன்மீக செம்மல், தேர் திருப்பணி கமிட்டித் தலைவர், பி. எஸ். சங்கரநாராயணன் தேரை வடம் பிடித்து இழுத்து பொதுமக்களுக்கு தொடங்கி வைத்தனர், சிந்தாமணி ராமலிங்க சுவாமி இந்து அறநிலையத்துறை அதிகாரி ஸ்ரீ தேவி மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிந்ததும் வகுப்பறைகளில் உள்ள பொருட்களை அடித்து நொறுக்கிய மாணவர்கள்



மணப்பாறை, ஏப்.5-

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த 10-ந்தேதி பிளஸ்-2 பொதுத்தேர்வு தொடங்கியது, இந்த தேர்வுகள் நேற்று முன் தினம் நிறைவு பெற்றது. தேர்வுகள் முடிந்த மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்ட மாணவ, மாணவிகள் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டனர். இதில் சிலர் பேனா மையை தெளித்தும் உற்சாகத்தை வெளிப்படுத்தினர். இதற்கிடையே திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த புத்தானத்தத்தில் உள்ள அரசு மேல்நிலைபள்ளியில் 140 மாணவர்கள் உள்பட சுமார் 320 பேர் பிளஸ்-2 பொதுத்தேர்வை எழுதினர்.

தேர்வு முடிந்ததும் மாணவர்கள் சிலர் 25 வகுப்பறை கட்டிடங்களில் சுமார் 17 வகுப்பறைகளை சூறையாடினர். அப்போது அந்த கட்டிடங்களில் இருந்த மின் விசிறிகள், மின் விளக்குகள், கதவு, மேஜை, நாற்காலி என பொருட்களை அடித்து நொறுக்கினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் பற்றி தகவல் அறிந்த புத்தானத்தம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மேலும் இது தொடர்பாக தேர்வு மைய கண்காணிப்பாளர் புத்தானத்தம் போலீசில் அளித்த புகாரின் பேரில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்கட்ட விசாரணையில் 4 மாணவர்கள் தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது. இதையடுத்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மாணவர்களின் இந்த செயல் பொது மக்களை முகம் சுழிக்க வைத்துள்ளது.

# சங்கரன்கோவிலில் திமுக புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம்



தென்காசி, ஏப்.5-

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவிலில் கழுகுமலை சாலையில் வைத்து புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நடைபெற்றது, முகாமிற்கு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார், சங்கரன்கோவில் தொகுதி பொறுப்பாளர் மாநில அயலக அணி இணைச் செயலாளர் புகழ்காந்தி முன்னிலை வகித்தார். இதில் இளைஞர்கள், இளம்பெண்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்துடன் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதில் மாவட்ட பொருளாளர் சரவணன் , மாவட்ட துணைச் செயலாளர் புனிதா, நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, நகரச் செயலாளர் பிரகாஷ், நகர துணை செயலாளர்கள் கேஎஸ்எஸ் மாரியப்பன், முத்துக்குமார், சுப்புத்தாய் இளைஞர் அணி சரவணன், மாணவரணி கார்த்தி ,அப்பாஸ் அலி, வார்டு செயலாளர் ஆறுமுகம், யோசப், ஜான்சன், சிவா,சிவாஜி, ஜெயக்குமார், பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடியில் காங்கிரஸ் கட்சி கண்டன பொதுக்கூட்டம்



*ஆலங்குடி, ஏப். 05*

*புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் நடைபெற்ற ராகுல்காந்தி மீதான நடவடிக்கைக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கலந்துகொண்டு பேசுகையில்,*

*பேச்சு சுதந்திரத்தை ஒடுக்கும் போக்கை ராகுல்காந்தி மீதான நடவடிக்கைகள் மூலம் புள்ளி வைத்து தொடங்கியுள்ளது பாஜக. இந்திய வரலாற்றிலே எவ்வித விவாதங்களிலும் கலந்துகொள்ளாத ஒரே பிரதமராக மோடி இருக்கிறார். 2019-ல் ராகுல் காந்தி பேசியதற்கு வழக்கு தொடரப்பட்டது. பின்னர் 2022-ல் வழக்கு தொடர்ந்த வாதியே உயர்நீதிமன்றத்தில் தடை கோரி 1 ஆண்டுகாலம் விசாரணைக்கு தடையும் பெற்றார்.*

*ராகுல் காந்தி 3500 கிமீதூரம் பாதயாத்திரை சென்றார். அப்போது, பலமொழி பேசும் மக்கள் அவருக்கு கோடுத்த வரவேற்பும், மக்களவையில், ராகுல் காந்தி எழுப்பிய கேள்விகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் பதில்சொல்லமுடியாமல், உடனே வாதியிடம் வழக்கு விசாரணைக்கு தடை விதித்த வழக்கை வாபஸ் பெறச்சொல்லி, பிப்27-ல் விசாரணையை தொடங்கி, மார்ச். 23 ஆம் தேதி வழக்கில் தீர்ப்பு, 24ம் தேதி பதவி இழப்பு. இது ஜனநாயக நாடா என சந்தேகம் எழுகிறது.*

*இவ்வளவு அவசரமாக வழக்கில் தீர்ப்பு வழங்கியது ராகுல்காந்தியை எதிர்கொள்ள முடியாத உறுத்தலே காரணம். சட்டம் என்பது வேறு, நீதி என்பது வேறு சட்டம் தள்ளாடலாம், தடுமாறலாம். நீதி எப்போதும் தடுமாறாமல் தலை நிமிரும். வாய்மொழி அவதூறுக்கு 2 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டது இந்தியவரலாற்றிலே கிடையாது. பேச்சு சுதந்திரத்தை தடுத்து ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்குகிறது பாஜக என பேசினார், .கூட்டத்தில் எம்பி கார்த்தி சிதம்பரம் ,முன்னாள் எம்எல்ஏ ராம சுப்புராம், நகர காங்கிரஸ் தலைவா அரங்குளவன் உள்பட பலா கலந்துகொண்டனா.*

# அரியலூரில் தொடக்க கூட்டுறவு வங்கி பணியாளர்கள் சங்க பேரணி



அரியலூர்,ஏப். 5-

அரியலூரில் தொடக்க கூட்டுறவு வங்கி பணியாளர்கள் சங்க பேரணி நடைபெற்றது.

இப்பேரணி அரியலூர் காமராஜர் திடலில் தொடங்கி, பேருந்து நிலையம் அண்ணா சிலை வரை நடைபெற்ற, தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தின், அரியலூர் மாவட்ட கிளை சார்பிலான பேரணிக்கு, சங்கத்தின் மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார், மாவட்ட செயலாளர் தமிழ் மணி முன்னிலை வகித்து வரவேற்றுப் பேசினார்.

தமிழக அளவில் பல நோக்கு சேவை சங்கங்களாக செயல்படும் தொடக்க கூட்டுறவு வங்கிகள், ஏற்கனவே விவசாய கடன், மத்திய கால கடன், நகை கடன் உள்ளிட்டவற்றை வழங்குவதுடன், பொது விநியோகத் திட்ட பணி, உரம் விநியோகம் சேவைமையங்கள் என, பல்நோக்கு சேவைகளை பொதுமக்களுக்காக செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் விவசாயத்துக்கு தேவையான டிராக்டர், தெளிப்பான்கள், உழவு கருவிகள், சிறு போக்குவரத்து வாகனங்கள் என, அதிகாரிகளால் கட்டாயப்படுத்தப்பட்டு வாங்கப்படும் வாகனங்கள் யாவும், எந்த வித லாபத்தையும் ஈட்டவில்லை. மாறாக சங்கங்கள் இதன் மூலம் நட்டத்தையே சந்தித்து வருகின்றன. போட்ட முதலீடு முழுமையாக நட்டக்கணக்கில் கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சங்கம் சார்பில் இயந்திரங்கள் வாங்க வற்புறுத்தப்படும் தொழில்கள் சாத்தியமானதா? என, அரசு சிந்திக்க வேண்டும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், நட்டத்தில் செயல்படும் சங்கங்கள், பெரிய அளவில் முதலீடு செய்ய வற்புறுத்தப்படுவது கைவிடப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படும் தொழில்களில் எதிர்பாராத இழப்புகள் ஏற்படும் பட்சத்தில், பணியாளர்களையும், நிர்வாகத்தையும் இதில் பொறுப்பாக்க கூடாது என்பதற்கு, அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும். என்பதை வலியுறுத்தும் வகையில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளரை சந்தித்து, கோரிக்கை மனு கொடுப்பது என சங்க நிர்வாகிகள் கூறினர்.

இப்பேரணியில், தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தின், அரியலூர் மாவட்ட பொருளாளர் பழனிவேல், மாவட்ட துணைத் தலைவர்கள் ராஜேந்திரன், அமுதா, இணைச்செயலாளர் அறிவழகன், ஓய்வு பெற்ற கூட்டுறவு சங்க அமைப்புகளின் மாவட்டத் தலைவர் கண்ணையன், மாவட்ட செயலாளர் புலிகேசி, மாவட்ட பொருளாளர் நல்லதம்பி, துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்பட, ஏராளமானோர் பங்கேற்றனர்.

# சாலை விரிவாக்கம் குறித்து அமைச்சர் முத்துசாமி நேரில் ஆய்வு



ஈரோடு, ஏப். 5 -

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.கே.வி. சாலை, காவேரி சாலை பகுதியில் சத்தியா வே பிரிட்ஜ் முதல் நகர காவல் நிலையம் வரை உள்ள சாலையின் எல்லை வரை, சாலை விரிவாக்கம் செய்து, வடிகால் வசதி மற்றும் நடைபாதை அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.கிருஷ்ணனுண்ணி, ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் ஜானகிரவீந்திரன் உட்பட துறை சார்ந்த உயர் அலுவலர்கள் இருந்தனர்.

# திருவரங்குளம் அருகே வம்பன் வீரமாகாளியம்மன் கோவில் பங்குனி திருவிழா காப்பு கட்டுதலுடன் துவங்கியது



*திருவரங்குளம், ஏப்.5-*

*திருவரங்குளம் அருகே உள்ள வம்பன் வீரமாகாளியம்மன் கோவில் பங்குனி திருவிழா காப்பு கட்டுதலுடன் துவங்கியது முன்னதாக திருவரங்குளம் பெரியநாயகி அம்பாள் உடனுரை அரங்குல நாதர் கோவிலில் இருந்து அம்பாளை சப்பரத்தில் எழுந்தருள செய்து பக்தர்கள் வானவேடிக்கை மேளதாளத்துடன் ஊர்வலமாக சென்றனர், அம்பாளுக்கு வம்பன் நாள் ரோட்டில் வியாபாரிகள் பொதுமக்கள் சார்பில் வானவேடிக்கை, மேளதாளத்துடன் அர்ச்சனை செய்து வீரமாகாளி அம்பாளுக்கு வரவேற்பு அளித்தனர்.*

*வீரமாகாளியம்மன் கோவிலில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க அம்மாளுக்கு காப்பு கட்டுதல் நடைபெற்றது.*

*அதனை தொடர்ந்து தினமும் மண்டகப் படிதாரர்கள் சார்பில் அபிஷேக ஆராதனை சிறப்பு வழிபாடுகள் இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 11. 4. 2023 செவ்வாய்க்கிழமை அன்று மாட்டுவண்டி, குதிரை வண்டி பந்தயம் நடைபெற உள்ளது, ஏற்பாடுகளை மாஞ்சான் விடுதி கொத்தகோட்டை ஊராட்சி பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் மண்டகப் படிதாரர்கள் செய்து வருகின்றனர்.*

# காரைக்கால் மாவட்டத்தில் கொரோனா தொற்று சமூகப் பரவல் ஏற்படவில்லை கலெக்டர் குலோத்துங்கன் பேட்டி



காரைக்கால்,ஏப்,5

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்போது "காரைக்கால் கொரோனா தொற்று சமூகப் பரவல் ஏற்படவில்லை எனவும், முக கவசம் அணிவது, சமூக இடைவெளி கடைபிடித்தல் போன்றவை பொதுமக்களின் நன்மைக்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளதாகவும், காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் கொரோனா வார்டு ஏற்படுத்தும் சூழ்நிலை தற்போது இல்லை எனவும் கொரோனா தொற்றை சமாளிக்க கூடிய அனைத்து மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனா பாதிப்பால் 35 வயது பெண் ஒருவர் இறந்து விட்டதாக வந்த செய்தி குறித்து பேசும்போது அந்தப் பெண் மார்ச் 8ம் தேதியில் இருந்து ஜிப்மர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாகவும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு கொரோனா நோய் தொற்று இல்லை எனவும் ஏப்ரல் 1-தேதி தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் 2-தேதி இறந்துவிட்டதாகவும் அவர் மூளையில் கட்டி இருந்ததன் காரணமாக புதுச்சேரி ஜிப்மரில் சிகிச்சை பெற்று வந்ததாகவும் அவர் இறந்ததற்கு கொரோனா மட்டுமே காரணம் இல்லை எனவும் தெரிவித்தார். மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகமும் நலவழித்துறையும் தீவிரமாக மேற்கொண்டு வருவதாகவும் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

# மகாவீர் ஜெயந்தியையொட்டி கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் நான்கு இடங்களில் நீர்மோர் பந்தல்



சீர்காழி, ஏப். 5 –

தமிழகத்தில் கோடைக்காலம் துவங்கும் முன்னரே பல்வேறு மாவட்டங்களில் 100 டிகிரி செல்சியஸை தாண்டி கடும் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்களின் தாகத்தை தீர்க்கும் வகையில், மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு ஜெயின் சங்கம் மற்றும் பி.ஜே.எஸ் இயக்கம் சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சீர்காழி புதிய பேருந்து நிலையம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நீர் மோர் பந்தலை சீர்காழி காவல் ஆய்வாளர் சிவக்குமார் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார்.

இதேபோல் பழைய பேருந்து நிலையம், கொள்ளிட முக்குட்டு, கடைவீதி ஆகிய நான்கு இடங்களில் பொதுமக்களின் தாகத்தை தணிக்க நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது.

# திருவள்ளூர் மாவட்ட தலைமை திமுக வழக்கறிஞர் உறுப்பினர் சேர்க்கை படிவத்தை பெற்றுக்கொண்டார்



ஊத்துக்கோட்டை, ஏப். 5–

திருவள்ளூர் மத்திய மாவட்டம், எல்லாபுரம் மத்திய ஒன்றியத்தில் திமுக உறுப்பினர் சேர்க்கை படிவத்தை பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சி கன்னிகாபுரம் ஊராட்சியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு எல்லாபுரம் மத்திய ஒன்றிய செயலாளர் கோடுவெளி தங்கம் முரளி தலைமை தாங்கினார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மாவட்டத் துணைச் செயலாளர் வி.ஜே. சீனிவாசன், ஒன்றிய அவை தலைவர் பி.ஜி.முனுசாமி, துணைச் செயலாளர்கள் சுப்ரமணி, நாகலிங்கம், உமா சீனிவாசன், ஒன்றிய பொருளாளர் லோகநாதன், மாவட்ட பிரதிநிதிகள் டி.பாஸ்கர், ஜி.பாஸ்கர், கே.ஜி.அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கட்சியின் தலைமை திமுகவழக்கறிஞரும்,பூந்தமல்லி சட்டமன்ற தொகுதியின் பார்வையாளருமான ப.கணேசன் கலந்து கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொண்டு கட்சியில் புதியதாக ஒரு கோடி உறுப்பினர்களை சேர்க்க கட்சியில் உள்ளவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், நாடாளுமன்றத் தேர்தலில் திமுக மகத்தான வெற்றி பெற நாம் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், பூந்தமல்லி நகர செயலாளர் ஏ.ஜி.ஆர்.திருமலை, மத்திய ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி விஜயகுமார், கோடுவெளி தகவல் தொழில்நுட்ப அணி எம். வேலன், ஆயிலச்சேரி ரகு, கள்ளிகுப்பம் நாகு, வெங்கல் ஸ்ரீதர் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆக்கிரமிப்பில் அத்துமீறும் தனியார் நிறுவனம் ஆக்கிரமிப்பை அகற்ற போராடும் சீவாடி கிராம பொதுமக்கள்



செய்யூர், ஏப் 5 –

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், சீவாடி ஊராட்சியில் சில மாதங்களுக்கு முன்பு தனியார் நிறுவன உரிமையாளர் இரவிக்குமார் என்பவர் சீவாடி ஊராட்சிக்குட்பட்ட சித்தேரி பெரிய ஏரிக்குள் சுமார் 10 ஏக்கர் நீர்நிலை புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தார்.

இதனை ஊராட்சி மன்ற தலைவர் ச.அரங்கநாதன் மூலம் சிறு, குறு, நடுத்தர தொழில் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற உள்ளாட்சி பிரதிநிதிகளின் கலந்துரையாடல் மற்றும் கோரிக்கை மனுக்கள் பெறுதல் நிகழ்ச்சியில் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி மனுவாக கொடுக்கப்பட்டது.

அம்மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலமாக அளவீடு செய்யப்பட்டு, அத்துக்கல் நடப்பட்டிருந்தது. மேலும் தனியார் நிறுவன உரிமையாளர் ஊராட்சி மன்ற தலைவர் ச.அரங்கநாதன் மீது உயர்நீதிமன்றத்தில் பொய் வழக்கு தொடர்ந்ததாக கூறப்படுகிறது.

அந்த வழக்கின் விசாரணையில் நேர்மையாக செயல்பட்ட ஊராட்சி மன்ற தலைவருக்கு எதிராக போடப்பட்ட பொய் வழக்கை ரத்து செய்து ஆணை வெளியிட்டது உயர்நீதிமன்றம். வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலமாக கிராம நிர்வாக அலுவலர் ஸ்டாலின் முன்னிலையிலும், அளவீட்டாளர் பிரகாஷ் முன்னிலையிலும் நடப்பட்ட அத்துக்கல்லை உயர்நீதிமன்ற உத்தரவையும் மீறி தனியார் நிறுவனமானது தன்னிச்சையாக அகற்றி மீண்டும் அதிகப்படியான நீர்நிலை பொறம்போக்கு இடங்களை ஆக்கிரமிப்பு செய்து, முள்வேலி அடைத்து தனது அத்துமிறலை காண்பித்து இருக்கிறது.

இதனை அறிந்த கிராம மக்கள் ஊராட்சி மன்ற தலைவரிடம் மீண்டும் புகார் கொடுத்தார்கள். இதனை ஊராட்சி நிர்வாகம் கள ஆய்வு செய்து இனியும் ஊராட்சியில் ஆக்கிரமிப்பு தொடரக்கூடாது என்ற எண்ணத்தில் உடனடியாக கிராம மக்களை ஒன்று திரட்டி சிறப்பு கூட்டம் கூட்டி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் ஊராட்சியில் அனைவரும் ஒன்றிணைந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் பேச வேண்டும் என்று முடிவு செய்தனர்.

எனவே நேற்று ஊராட்சி சார்பாக ஊராட்சி மன்ற தலைவர் ச.அரங்கநாதன் தலைமையில், 1 வது வார்டு ஒன்றிய கவுன்சிலர் மு.சீனுவாசன், துணை தலைவர் க.ஜெயவேலு, வார்டு உறுப்பினர்கள் லலிதா அருள், செல்வி கேசவன், பரமேஸ்வரி அழகரசு மற்றும் பொது மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மாவட்ட ஆட்சியரை சந்தித்து ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்றி தரும்படி கூறினார்கள்.

உடனே மாவட்ட ஆட்சியர் வருவாய் கோட்டாட்சியரை தொடர்பு கொண்டு இதனை நேரில் கள ஆய்வு செய்து விரைவில் ஆக்கிரமிப்பை அகற்றி தரும்படியாக உத்தரவு பிறப்பித்தார். மக்களின் நீராதாரமான ஏரியை மீட்க இதில் கலந்துகொண்ட அனைத்து பொதுமக்களுக்கும் ஊராட்சியின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# தமிழகத்தில் 8-ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு



சென்னை, ஏப்,5

தென் இந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டலத்தின் கீழடுக்குகளில் கிழக்கு திசை காற்றும், மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவுகிறது.

இதன் காரணமாக இன்றும் நாளையும் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி-மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக் கூடும். 6-ந்தேதி முதல் 8-ந்தேதி வரை மிதமான மழை பெய்யும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.





காரைக்கால் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள குலோத்துங்கனை, 36 ஆவது பெடரேஷன் கோப்பை போட்டி ஒருங்கிணைப்பு குழுவினர் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து மற்றும் அறிவுறுத்தல்களை பெற்றபோது. மேலும், மாவட்ட ஆட்சியர் போட்டியின் ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். உடன் போட்டி அமைப்பு செயலாளர் நடராஜன், சர்வதேச விளையாட்டு வீரர், இந்திய கைப்பந்து சம்மேளன இணை செயலாளர் , போட்டியின் இயக்குநர் கல்விமாறன், எம்.வி.ஐ மற்றும் போட்டி மேலாளர் திரு. கதிர்வேலன், தேசிய விளையாட்டு வீரர்கள் உடன் இருந்தனர்.

## காரைக்காலில் அரசு கல்லூரி மாணவர்கள்

# ஆங்கில பேச்சை வளர்க பயிற்சி வகுப்புகள் அமைச்சர் தொடங்கி வைத்தார்



காரைக்கால், ஏப்,5

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக ஆதிதிராவிடர் விடுதியில் தங்கி படிக்கும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு ஆங்கிலம் பேச பயிற்சி வகுப்பு மற்றும் பொது மக்களுக்கான மின்னனு பரிவர்த்தனை துவக்க விழாவும் பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவினை ஆதி திராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் துறை, மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா துவக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ,ஆதி திராவிடர் நலத்துறை இயக்குனர் இளங்கோவன் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் மேலும் ஆதிதிராவிடர் நலத்துறை உதவி இயக்குனர் மதன்குமார். மற்றும் கல்லூரியின் முதல்வர் கிருஷ்ண பிரசாத் மேலும் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் எடுக்கும் ஆங்கில திறமை பெற்ற கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பினை எடுக்கிறார்கள். மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

முதல் கட்டமாக சுமார் 250 மாணவ மாணவிகள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொள்கிறார்கள். தினமும் மாலை 5:30 மணி முதல் 7:30 மணி வரை வகுப்புகள் நடைபெறும் என்றும் 60 நாட்கள் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பெருந்தலைவர் காமராஜர் கல்வியல் கல்லூரி, அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி, செருமாவிளங்கையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் கல்லூரி மற்றும் வரிச்சக்குடியில் அமைந்துள்ள காரைக்கால் தொழில் நுட்ப கல்லூரி ஆகிய நான்கு இடங்களில் இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன என ஆதிதிராவிடர் நலத்துறை உதவி இயக்குனர் தெரிவித்தார்

## இளம் பெண் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட வழக்கில் திருப்பம்

# நண்பனை சிக்க வைத்து தப்பிய காதலன் 3 மாதங்களுக்கு பிறகு கைது



சீர்காழி, ஏப். 5 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே வைரவனிருப்பு பகுதியை சேர்ந்த இளம்பெண் சுகன்யா. இவர் கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் தேதி அவரது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மறுநாள் 5 ஆம் தேதி சீர்காழி அரசு மருத்துவமனையில் பிரதே பரிசோதனை முடிந்த நிலையில் சுகன்யாவின் தற்கொலைக்கு காரணமான பைனான்சியர் வினோத் என்பவரை கைது செய்யக்கோரி பெண்ணின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் சீர்காழி அரசு மருத்துவமனை எதிரே சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனையடுத்து பைனான்சியர் வினோத்தை போலிசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், இறந்த சுகன்யாவின் செல்போனை ஆய்வு செய்த அவரது பெற்றோர் தங்களது பெண்ணின் தற்கொலைக்கு அவரது காதலன் ஜான்டி ரோட்ஸ்தான் காரணம் என்பதை அறிந்து அதிர்ச்சிக்குள்ளாகினர். இதனையடுத்து செல்போன் பதிவுகளுடன் கொள்ளிடம் காவல் நிலையத்தில் சுகன்யாவின் பெற்றோர் புகார் அளித்தனர்.



அதன் பேரில் போலிசார் மேற்கொண்ட விசாரணையில் சுகன்யாவின் தற்கொலைக்கு காதலன் ஜான்டி ரோட்ஸ்தான் காரணம் என்பதும், தனது நண்பனும் பைனான்சியருமான வினோத்திடம் வாங்கிய கடனை திருப்பி தரமுடியாததால் நண்பன் என பாராமல் வினோத்தை சுகன்யாவின் தற்கொலை வழக்கில் சிக்க வைத்ததுடன் உறவினர்களை தூண்டிவிட்டு சாலைமறியலிலும் ஈடுபட்டது தெரியவந்தது.

இதனையடுத்து ஜான்டி ரோட்ஸ்சை கைது செய்த கொள்ளிடம் போலிசார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க கூடாது என தனது நண்பனையே வழக்கில் சிக்கவைத்த சம்பவம் சீர்காழி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நான்கு வழிச்சாலை பணிக்கு

# விதிகளை மீறி கொண்டு செல்லப்படும் சவுடு மண் சாலையில் சிதறுவதால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் அவதி



சீர்காழி, ஏப். 5 –

விழுப்புரம் முதல் நாகப்பட்டினம் வரை நான்கு வழிச்சாலை அமைக்கும் பணிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியை அடுத்த கொள்ளிடம் முதல் தரங்கம்பாடி வரை நான்கு வழி சாலை விரிவாக்க பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இப்பணிக்காக சீர்காழி சுற்றுவட்டார பகுதிகளில் தனியார் சவுடுமண் குவாரிகள் அமைக்கப்பட்டு நாள்தோறும் ஆயிரக்கணக்கான லாரிகளில் சவுடுமண் கொண்டு வரப்படுகிறது. இரவு பகல் என 24 மணி நேரமும் சவுடுமண் ஏற்றிய லாரிகள் நகர் பகுதியை கடந்து புறவழிச் சாலைக்கு சென்று வருகிறது.

இந்தலாரிகளில் விதிகளை மீறி அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக எவ்வித பாதுகாப்பும் இன்றி சவுடு மண்ணை ஏற்றி செல்வதால் வளைவுகள், வேகத்தடைகளில் லாரிகள் செல்லும் போது அதிகப்படியான மண் சரிந்து சாலை முழுவதும் சிதறிக் கிடக்கிறது.

இதனால் நகர் பகுதி முழுவதும் சாலைகள் சவுடு நிறைந்து இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமலும், பொதுமக்கள் நடந்து செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

விதிமுறைகளை மீறி மண் ஏற்றி செல்வதால் வேகத்தடைகளை கடக்கும் போது அழுத்தம் தாங்காமல் கதவுகள் திறந்து மண் சாலையின் நடுவே சரிந்து விடுகிறது. இதனை கண்டு கொள்ளாமல் லாரி ஓட்டுநர்கள் சென்று விடும் நிலையில் அப்பகுதி மக்களே மண்ணை அகற்றும் நிலையும் ஏற்படுகிறது.

இருசக்கர வாகனங்களில் செல்லும் பலர் சாலையில் சிதறி கிடக்கும் மண்ணில் சறுக்கி விழுந்து அடுத்தடுத்து விபத்துகளிலும் சிக்கி வருகின்றனர்.

எனவே நான்கு வழிச்சாலைக்கு மண் ஏற்றி செல்லும் லாரிகளை போக்குவரத்து துறை அதிகாரிகள் உரிய ஆய்வு செய்து தகுந்த பாதுகாப்புடன் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சாலையில் சிதறிய மண்ணை உடனே அகற்ற வேண்டும் எனவும் பொது மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம்

# கட்சியின் செய்தி தொடர்பு குழு துணைத் தலைவர் பி.டி.அரசகுமார் பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, ஏப். 5–

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், எல்லாபுரம் வடக்கு ஒன்றியம், குமாரப்பேட்டை ஊராட்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் அறிவுறுத்தலின்படி திமுக உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான பி.ஜே.மூர்த்தி தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக கும்மிடிப்பூண்டி தொகுதியின் பார்வையாளரும், கட்சியின் செய்தி தொடர்பு குழு துணை தலைவருமான பி.டி.அரசகுமார் கலந்து கொண்டு பூத் கமிட்டி அமைப்பது குறித்தும், புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கைக்கான காரணத்தையும், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் திமுக மாபெரும் வெற்றியை பெற கட்சியினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் ரமேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் மு.கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் ஏ.வி. ராமமூர்த்தி, ஒன்றிய அவை தலைவர் ரவிச்சந்திரன், வி.பி. ரவிக்குமார், வழக்கறிஞர்கள் சீனிவாசன், முனுசாமி, ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், வடமதுரை அப்புன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கிளை நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், பொதுமக்களும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட நெசவாளர் அணி ஈஸ்வர குமார் செய்திருந்தார்.

# சிறுவாபுரி பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம். நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம்





திருவள்ளூர், ஏப்ரல் 5 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலுக்கு 6 வாரங்கள் வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. இதனால் முருகனுக்கு உகந்த செவ்வாய்க்கிழமை நாட்களில் சிறுவாபுரி கோவிலுக்கு பக்தர்கள் அதிகளவில் வந்து செல்வது வழக்கமாக உள்ளது.நேற்று செவ்வாய்க்கிழமை மற்றும் அரசு விடுமுறை நாள் என்பதால் சிறுவாபுரி முருகன் கோவிலில் நேற்று காலை முதலே பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் சாமி தரிசனம் செய்ய வந்தனர்.

இதனால், பொது தரிசனம், ரூ.50, ரூ.100 கட்டண தரிசனம் என அனைத்து வரிசைகளிலும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு மண்டபம் வழியே கோவிலுக்குள் வந்து சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

ஆனால், போதிய அளவு போலீசார் இல்லாததால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. எனவே விசேஷ காலங்களில் அதிக அளவு போலீசாரை நியமித்து போக்குவரத்தை சீரமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பக்தர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொன்னமராவதியில் திமுகவில் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கை திட்டம் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தொடங்கி வைத்தார்



பொன்னமராவதி, ஏப்.05-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில் உடன்பிறப்புகளாய் இணைவோம் திமுகவிற்கு ஒருகோடி உறுப்பினர்கள் புதிய சேர்க்கை திட்டத்தின் படி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார், தமிழ்நாடு முழுவதும் திமுகவினர் உடன்பிறப்புகளாய் இணைவோம் என்ற உறுப்பினர் சேர்க்கை திட்டத்தில் ஒரு கோடி உறுப்பினர்களை திமுகவில் சேர்க்கும் பணி தொடங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொன்னமராவதி ஒன்றியத்தில் பல்வேறு இடங்களில் உறுப்பினர் சேர்க்கை முகாமை புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், தமிழக சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ஏராளமான ஆண்கள், பெண்கள் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில், திமுகதெற்கு ஒன்றிய செயலாளர் அடைக்கலமணி, வடக்கு ஒன்றிய செயலாளர் முத்து, நகரக்

திமுக செயலாளர் அழகப்பன், இளைஞரணி இளையராஜா, தகவல் தொழில்நுட்பபிரிவு ஒருங்கிணைப்பாளர் ஆலவயல் முரளி சுப்பையா, பேரூராட்சி துணைத்தலைவர் வெங்கடேசன், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கடையநல்லூர் ஊராட்சிஒன்றியத்தில்

# பொதுமக்கள் பயன்பாட்டிற்காக டிராக்டர் வழங்கும் நிகழ்ச்சி



தென்காசி,ஏப்.5

கடையநல்லூர் ஊராட்சிஒன்றியத்திற்கு உட்பட்ட சொக்கம்பட்டி ஊராட்சி மன்றத்திற்கு தமிழக அரசின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக புதிய டிராக்டர் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் பா. சுப்பம்மாள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கந்தசாமி, ராதா, சொக்கம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பச்சமால், துணைத் தலைவர் செல்வகுமார், திரிகூடபுரம் ஊராட்சி ஒன்றிய குழு கவுன்சிலர் அருணாசல பாண்டியன், புன்னையாபுரம் ஒன்றிய கவுன்சிலர் சிங்கிலிபட்டி மணிகண்டன், சொக்கம்பட்டி ஊராட்சி மன்றச் செயலாளர் ராமர், மற்றும் அரசு அலுவலர்கள் டிராக்டர் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



புதுக்கோட்டை திமுக அலுவலகம் முன்பாக மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் முத்துக்கருப்பன் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கோடைகால தண்ணீர் பந்தலை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். மாவட்ட செயலாளர் செல்லபாண்டியன், நகர செயலாளர் செந்தில்,நிர்வாகிகள் வீரமணி, ராஜேஸ்வரி, தமிழ்ராஜா, ஒன்றிய செயலாளர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

# இலங்கையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இந்தியா உதவ வேண்டும் ரணில் விக்ரமசிங்கே

கொழும்பு , ஏப் .5-

இலங்கையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இந்தியா உதவ வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் ரணில் விக்ரமசிங்கே கேட்டுக்கொண்டுள்ளார்.

நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் தலைவர் பாரத் லால் தலைமையிலான இந்திய தூதுக்குழு 2 நாள் பயணமாக கடந்த 1ம் தேதி இலங்கை சென்றது. இக்குழு, தலைநகர் கொழும்புவில், அதிபர் ரணில் விக்ரமசிங்கேவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தச் சந்திப்பு குறித்து பாரத் லால் விடுத்துள்ள அறிக்கை விவரம்: "இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கேவை சந்தித்தபோது அவர், இலங்கைக்கான தனது தொலைநோக்குப் பார்வை குறித்தும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வருவது குறித்தும் இந்திய தூதுக்குழுவிடம் விரிவாக விளக்கினார்.



மேலும், கொள்கை சீர்த்திருத்தங்கள், டிஜிட்டல் தொழில்நுட்ப பயன்பாடு, திறன் வளர்ப்பு, நல்லாட்சி, துறைசார் வல்லுநர்களை உருவாக்குவதற்கான அமைப்புகளை உருவாக்குதல், பொதுமக்களுக்கு திட்டமிட்ட கால வரையறைக்குள் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை மையப்படுத்தியே அவரது உரையாடல் இருந்தது. அப்போது, சமூக-பொருளாதார முன்னேற்றத்திலும், பொருளாதார வளர்ச்சியிலும் இந்தியா அடைந்து வரும் முன்னேற்றங்களை ரணில் விக்ரமசிங்கே வெகுவாக பாராட்டினார். மேலும், இந்த விவகாரங்களில் இந்தியா இலங்கைக்கு உதவ வேண்டும் என்றும், ஆட்சி மற்றும் பொதுக் கொள்கைக்காக இலங்கையில் பல்கலைக்கழகம் அமைக்க உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அப்போது, நரேந்திர மோடி குஜராத் முதல்வராக பொறுப்பேற்றபோது, எதிர்மறை பொருளாதார வளர்ச்சியில் அந்த மாநிலம் இருந்ததையும், பின்னர் மக்களை மையப்படுத்திய கொள்கைகளை அமல்படுத்தியதன் மூலம் அம்மாநிலம் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியது குறித்தும் இந்திய தூதுக்குழு விளக்கியது. மேலும், பிரதமரான பிறகு நரேந்திர மோடி எவ்வாறு நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்பு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றுக்கு உயர் முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தி வருகிறார் என்பது குறித்தும் இந்திய தூதுக்குழு, இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கேவிடம் எடுத்துரைத்தது'' என்று பாரத் லால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரியலூர் வடக்கு ஒன்றிய திமுக செயல்வீரர்கள் கூட்டம்



அரியலூர்,ஏப். 5-

அரியலூர் வடக்கு ஒன்றிய திமுக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது

அரியலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்ற, திமுக அரியலூர் வடக்கு ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டத்துக்கு, ஒன்றிய அவைத் தலைவர் வெங்கடகிருஷ்ணாபுரம் முத்துசாமி தலைமை வகித்தார், ஒன்றிய செயலாளர் அறிவழகன் வரவேற்று பேசினார், திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜா, திமுக மாவட்ட துணை செயலாளர் சந்திரசேகர், சாஸ்திரி நகர் ஆனந்த், மணக்குடி பாலு உள்ளிட்ட பலர் பேசிய இக்கூட்டத்தில், வரும் நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி, திமுக சார்பில் பூத் கமிட்டி அமைப்பது தொடர்பான அறிவுரைகளை வழங்கி, கட்சியின் மேலிட பார்வையாளர் கவிஞர் சல்மா பேசினார்.

இக்கூட்டத்தில், திமுக மாவட்ட துணைச் செயலாளர் லதா பாலு, திமுக நிர்வாகிகள் பெரிய திருக்கோணம் பரமசிவம், கல்லங்குறிச்சி சிவக்குமார், பெரிய நாகலூர் சாமிதுரை, கூத்தூர் ரவி, கவிஞர் வீர முரசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# அரியலூரில் மதிமுக சார்பில் உட்கட்சி தேர்தலுக்கான விருப்பமனு

அரியலூர், ஏப் .5-

அரியலூரில் மதிமுக சார்பில் உட்கட்சி தேர்தலுக்கான விருப்பமனு பெறப்பட்டது.

அரியலூர் மாவட்டத்தில், மதிமுக சார்பில், ஒன்றியம் நகரம், உள்ளிட்ட கட்சி அமைப்புகளில், போட்டியிடுவதற்கான விருப்பமனு தாக்கல் செய்யும் நிகழ்ச்சி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர், மதிமுக மாவட்ட செயலாளர் வக்கீல் கு.சின்னப்பா தலைமையில், கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. உட்கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக, மதிமுக நிர்வாகிகள் பலரும், தேர்தல் பார்வையாளர், கட்சியின் மாநில மாணவரணி செயலாளர் பால சசிகுமாரிடம் விருப்ப மனு தாக்கல் செய்தனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே ஸ்ரீகிராம அர்த்தஞாதீஸ்வரர் திருக்கோவில் திருத்தேர் பெருவிழா



கள்ளக்குறிச்சி, ஏப்,05_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எலவனாசூர்கோட்டை கிராமத்தில் எழுந்தருளி அருள் புரிந்து வரும் அருள்மிகு பிறஹன்நாயகி அம்பிகைசமேதஸ்ரீ கிராம அர்த்தஞாதீஸ்வரர் திருக்கோவில் திருத்தேர் தேரோட்டம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் சிறப்பு அழைப்பாளராகவருகை புரிந்து திருத்தேரை வடம் பிடித்து துவக்கி வைத்தார். இவ்விழாவின் முதல் நாளில் பஞ்சமூர்த்திகளுக்கு சிறப்பு அலங்கார தீபாராதனைநடைபெற்று, திருக்கல்யாண மஹோற்சவம் நடைபெற்றது.

தொடர்ந்து இரண்டாம் நாளான நேற்று பஞ்சமூர்த்தி சுவாமிகள் சிறப்பு அலங்காரத்தில் திருத்தேரில் அமைந்தபடி திருத்தேர் முக்கிய வீதிகள் வழியாக பக்தர்கள் வெள்ளத்தில் சென்ற பொழுது பக்தர்களை பரவசமூட்டும் வகையில் அசைந்தாடி சென்றது. மேலும் பக்தர்கள் பல்வேறுவேடம்அணிந்து கலை நிகழ்ச்சிகளுடன் திருத்தேர் வீதி உலா நடைபெற்றது.

மூன்றாம் நாளான இன்று திருக்கோவிலிலிருந்து பஞ்ச மூர்த்தி சுவாமிகள் புறப்பட்டு அருகே உள்ள நம்பிகுளத்தில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்று, மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும். 06-ம் தேதி சண்டிகேஸ்வரர் உற்சவம், விடையாற்சி உற்சவம் நடைபெற்று விழா முடிவடைகிறது.

# டிக்-டாக் செயலிக்கு தடை விதித்து ஆஸ்திரேலியா அரசு உத்தரவு

ஆஸ்திரேலியா , ஏப் .5-

அரசு அலுவலக செல்போன்களில் டிக்டாக் செயலியை பயன்படுத்த ஆஸ்திரேலியா அரசு தடை விதித்துள்ளது.

அமெரிக்கா, கனடா, பெல்ஜியம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் டிக் டாக் செயலிக்குதடைவிதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இங்கிலாந்து அரசு அலுவலக செல்போன்களில் டிக்-டாக் செயலியை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. பாதுகாப்பு கருதி அந்நாட்டு அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. அரசின் முக்கிய அலுவலகங்களின் பாதுகாப்பு அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அரசு அலுவலகங்களில் அரசுக்கு சொந்தமான மின்னணு சாதனங்களில் சீனா வீடியோவான டிக் டாக் செயலியை பயன்படுத்த தடை விதிப்பதாக இங்கிலாந்து பாராளுமன்றம் தெரிவித்தது.

இந்நிலையில், ஆஸ்திரேலியா அரசும் டிக் டாக் செயலிக்கு தடை விதித்துள்ளது. இதுகுறித்து பிரதமர் ஆண்டனி அல்பானிஸ் கூறுகையில், டிக் டாக் செயலியால் ஏற்படும் சாதக, பாதங்கள் குறித்து உள்துறை அமைச்சகம் அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். நாட்டின் பாதுகாப்பு கருதி உளவுத்துறை நிறுவனங்களின் அறிவுறுத்தல் படிடிக்டாக்கிற்கு ஆஸ்திரேலியா தடை விதித்துள்ளது.

# தென்காசியில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி,ஏப்.5-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டார்.



இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் தலா 13 ஆயிரத்து 500 வீதம் ஆக மொத்தம் 27 ஆயிரம் மதிப்பில் உதவி உபகரணங்களும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு அளித்த இரண்டு மாற்றுத் திறனாளிகளில் ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 13 ஆயிரத்து 500 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிளும் மற்றொரு மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 8500 மதிப்பில் காதொலி கருவியும் மாவட்ட ஆட்சியர் கோரிக்கை மனுவை ஏற்று உடனடியாக வழங்கினார்.

செங்கோட்டை வட்டத்தில் வசித்து வரும் விளிம்பு நிலையில் உள்ள திருநங்கைகளுக்கு தென்காசி வட்டம் கல்லூரணி குறுவட்டம் பாட்டாக்குறிச்சி கிராமம் அரசு புறம்போக்கு நிலத்தில் ஐந்து நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாவும், கல்லூரணி குறுவட்டம் பாட்டாக் குறிச்சி கிராமம் அரசு புறம்போக்கு நிலத்தில் 9 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாவும் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் வழங்கினார்.

# தென்னிந்தியத் திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்கள், டப்பிங் கலைஞர்கள் சங்கத்துக்கு வைக்கப்பட்ட சீலை அகற்ற உத்தரவு

சென்னை , ஏப் .5-

ஆவணங்களை எடுத்துக் கொள்ளும் வகையில் தென்னிந்தியத் திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்கள் மற்றும் டப்பிங் கலைஞர்கள் சங்கத்திற்கு வைக்கப்பட்ட 'சீலை' வரும் ஏப்.17ம் தேதி வரை அகற்ற சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சென்னை சாலிகிராமத்தில் தென்னிந்திய திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்கள் மற்றும் டப்பிங் கலைஞர்கள் சங்கத்திற்கான கட்டடம் கடந்த 2011-2012ம் ஆண்டில் கட்டப்பட்டது. சென்னை மாநகராட்சியிடம் பெற்ற திட்ட அனுமதியை மீறி, கட்டடம் கட்டப்பட்டதாக சங்க உறுப்பினர் ஒருவர் அளித்த புகாரையடுத்து, அந்த கட்டடத்திற்கு 'சீல்' வைக்கப்பட்டது.

இந்நிலையில், சங்க கட்டடத்திற்குள் உள்ள ஆவணங்கள், மேஜை உள்ளிட்ட பொருட்களை எடுப்பதற்காக சங்க கட்டடத்திற்கு வைக்கப்பட்ட 'சீலை' அகற்ற உத்தரவிடக்கோரி தென்னிந்திய திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்கள் மற்றும் டப்பிங் கலைஞர்கள் சங்க பொதுச் செயலாளர் கதிரவன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் வேலுமணி, லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று, ஏப்ரல் 17ம் தேதி வரை தென்னிந்திய திரைப்பட, தொலைக்காட்சி நடிகர்கள் மற்றும் டப்பிங் கலைஞர்கள் சங்க கட்டடத்திற்கு வைக்கப்பட்ட 'சீலை' அகற்ற உத்தரவிட்டனர். அக்கட்டடத்திற்கு ஏப்ரல் 18ம் தேதி மீண்டும் 'சீல்' வைக்க சென்னை மாநகராட்சிக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

# அரியலூரில் முன்னாள் படை வீரர்கள் நலச் சங்கம் சார்பில் கோரிக்கை மனு

அரியலூர்,ஏப்.5-

அரியலூரில் முன்னாள் படை வீரர்கள் நலச்சங்கம் சார்பில், கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.



முன்னாள் படை வீரர்களுக்கு பென்ஷன் வழங்குவதில் உள்ள குளறுபடிகளை நீக்கம் செய்ய வலியுறுத்தி, புதுடெல்லி ஜந்தர், மந்தர் பகுதியில், பல நாட்களாக போராட்டம் நடத்தி வரும் முன்னாள் படை வீரர்களுக்கு ஆதரவு தெரிவித்து, அரியலூர் மாவட்ட முன்னாள் முப்படை வீரர்கள் நலச்சங்கம் சார்பில், மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

சங்கத்தின் அரியலூர் மாவட்ட தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட செயலாளர் பாண்டியன், பொருளாளர் சூசை ராஜ் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு திரண்டு வந்து, மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்.

# தொழிலை விட சொன்னதால் கணவனை துண்டு துண்டாக வெட்டி பீச்சில் புதைத்த விபச்சார அழகி கைது

புதுக்கோட்டை, ஏப்.5-

விழுப்புரம் மாவட்டத்தை பூர்வீகமாக கொண்டவர் ஜெயந்தன் (வயது 28). என்ஜினீயரிங் பட்டதாரியான இவர் சென்னை நங்கநல்லூரில் வசித்து வரும் தனது சகோதரி ஜெயக்கிருபா வீட்டில் தங்கி மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இயங்கி வரும் வெளிநாட்டு விமான நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்தார் இதற்கிடையே கடந்த மாதம் கடந்த 18-ந்தேதி பணியை முடித்துவிட்டு, சொந்த ஊரான விழுப்புரம் சென்றுவிட்டு வருவதாக சகோதரியிடம் கூறிச்சென்ற ஜெயந்தன் அதன்பிறகு திரும்பவில்லை. அவரது செல்போனும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஜெயக்கிருபா, சொந்த ஊருக்கும், பணி செய்யும் இடத்திலும் விசாரித்தபோது அவர் வரவில்லை என்ற தகவல் கிடைத்தது. பதட்டம் அடைந்த ஜெயக்கிருபா தம்பியை காணவில்லை என்று சென்னை பழவந்தாங்கல் போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான ஜெயந்தனை தேடி வந்தனர். அப்போது ஜெயந்தனின் செல்போன் சிக்னலை ஆய்வு செய்தனர். அப்போது அது கடைசியாக புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகேயுள்ள செம்மாளப்பட்டி கிராமத்தை காட்டியது. உடனே சுதாரித்துக்கொண்ட போலீசார் கடந்த 1-ந்தேதி புதுக்கோட்டை விரைந்தனர், சிக்னல் அடையாளம் காணப்பட்ட வீட்டில் இருந்த பாக்கியலட்சுமி (38) என்ற பெண்ணை பிடித்து விசாரித்தனர், முதலில் அப்படியொரு நபரை தனக்கு தெரியாது



என்று மறுத்த பாக்கிலட்சுமி, உளறல் பேச்சால் மாட்டிக்கொண்டார். உரிய முறையில் விசாரித்தபோது, விமான நிலைய ஊழியர் ஜெயந்தனை தான் கொலை செய்துவிட்டதாகவும், பின்னர் உடலை துண்டு துண்டாக வெட்டி சென்னை கோவளம் கடற்கரையில் புதைத்துவிட்டதாகவும்கூறியதை கேட்டு போலீசாருக்கே தலைசுற்றியது.

அதாவது புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த பாக்கியலட்சுமிக்கு திருமணமாகி அவரது நடத்தை சந்தேகத்தில் கருத்து வேறுபாட்டால் கணவர் பிரிந்து சென்றுவிட்டார். இந்த தம்பதிக்கு 19 வயதில் ஒரு மகன் இருக்கிறார். இவர் மகனை வீட்டுவிட்டுசென்னை சென்றார், அங்கு விமான நிலையத்தில் பணியாற்றிய ஜெயந்தன் பாக்கியலட்சுமியை பார்த்துள்ளார். 2020-ல் விழுப்புரம் மாவட்டம் மயிலம் முருகன் கோவிலில் மாலை மாற்றி திருமணம் செய்து கொண்டு பாக்கியலட்சுமியை மனைவியாக்கினார். ஆனால் கணவர் உறவு வந்தாலும், பழக்கதோஷமான பாலியல் தொழிலை அவர் கைவிடவில்லை. இருந்தபோதிலும், அவரை எப்படியாவது திருத்தி தன்னுடன் குடும்பம் நடத்த வைக்க வேண்டும் என்ற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்ட ஜெயந்தன் அதற்கான முயற்சிகளில் இறங்கினார். அதன்படி பாக்கியலட்சுமி புதுக்கோட்டை சென்றிருப்பதை அறிந்து, கடந்த மாதம் 18-ந்தேதி அவரை தேடிச்சென்றார். அப்போதுதான் அவருக்கு திருமணமாகி, 19 வயதில் மகன் இருப்பதே தெரிந்தது. மனம் நொந்த ஜெயந்தன் அவரை கண்டித்தார். இதில் ஏற்பட்ட தகராறில் ஜெயந்தனை பாக்கியலட்சுமி அடித்து கொலை செய்து உடலை துண்டு துண்டாக வெட்டி ஒரு சூட்கேசில் வைத்து அடைத்து, வாடகைக்கு ஒரு காரை பிடித்துக்கொண்டு கோவளம் சென்று புதைத்தார். அதேபோல் இந்த கொடூர கொலைக்கு உடந்தையாக இருந்த சங்கர், பூசாரி வேல்முருகன் ஆகியோரை பிடிக்கவும் போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் சங்கத்திற்கு வைக்கப்பட்ட சீல் அகற்ற உத்தரவு

# வரலாறு பாட புத்தகத்திலிருந்து முகலாயர்கள் பகுதி நீக்கப்படவில்லை NCERT



TikTok

# டிக்-டாக் செயலிக்கு தடை விதித்து ஆஸ்திரேலியா அரசு உத்தரவு


| சென்னை / புதுக்கோட்டை | 05.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சு. சி. பிள்ளை , இந்தியக் கணிதவியலாளர் (பி.1901) (இ.1950)



ஜெகசீவன்ராம் , இந்தியாவின் 4வது துணைப் பிரதமர் (பி.1908) (இ.1986)



எம். சாரதா மேனன் , இந்திய மனநல மருத்துவர் (பி.1923)



க. கைலாசபதி , இலங்கை தமிழறிஞர், கல்வியாளர், ஊடகவியலாளர் (பி.1933) (இ.1986)



## இன்றைய நினைவு நாள்

மணிலால் காந்தி , இந்திய ஊடகவியலாளர், காந்தியவாதி (பி.1892) (இ.1956)



ராம. அழகப்பச் செட்டியார் , இந்திய தொழிலதிபர் (பி.1909) (இ.1957)



முகம்மது இசுமாயில் , இந்திய முசுலிம் அரசியல் தலைவர் (பி.1896) (இ.1972)



புதுகை **வரலாறு** நாளிதழ் நடத்தும்

# கல்வி கண்காட்சி

ஏப்ரல் 08,09
சனி, ஞாயிறு
2 நாட்கள்

5-ம் ஆண்டு

10 & +2
மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி

இடம் : விஜய் பேலஸ் A/C
புதுக்கோட்டை
நேரம் : காலை 8.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை

அனைவரும் வாருங்கள்
அனுமதி இலவசம்

## முன்னணி கல்வி நிறுவனங்கள் பங்குபெறும் பிரம்மாண்டமான கண்காட்சி

வரலாற்று சிறப்பு மிக்க நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த **மாணவ கண்மணிகள்** அரசு பொதுத்தேர்வை எழுதிக் கொண்டிருக்கக்கூடிய இச்சூழலில் அவர்களின் **உயர்கல்விக்காக தமிழ்நாட்டில்** மட்டுமில்லாமல் **அண்டை மாநிலங்களில்** இருக்கக்கூடிய பிரபல **முன்னணி கல்வி நிறுவனங்கள்** ஒரே இடத்தில் சங்கமிக்கும் **உயர் கல்விக்கு வழிகாட்டும் இத்திருவிழாவை** கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு தங்களின் ஆசியுடன் சிறப்பாக நடத்த உள்ளோம். இந்த நிகழ்ச்சியில் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் **பெற்றோர்,** மற்றும் **உறவினர்களுடன்** பங்கேற்று தங்களுக்கு உண்டான அனைத்து சந்தேகங்களையும் கண்காட்சியில் பங்கேற்கும் சம்பந்தப்பட்ட **துறை வல்லுனர்களுடன்** கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெற்று **தலைசிறந்த கல்வி நிறுவனத்தில் தங்களுடைய உயர்கல்வி கனவை துவங்கி எதிர்கால இந்தியாவை உலக அரங்கில் தலை நிமிரச்செய்திட வாரீர்**


தங்களை மகிழ்விக்க வரவேற்றுக் காத்திருக்கின்றோம் !
வாருங்கள் நேரில் சந்திப்போம்!

இரண்டு நாட்களும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை **மாணவ, மாணவியரின்** தனி மற்றும் குழுவினர் (ஆண், பெண் தனித்தனியாக) **பாட்டு, நடனம் உள்ளிட்ட கலை விழாக்கள்** நடைபெறும். இதில் பங்கேற்க விரும்புவோர் ஏப்ரல் 8-ம் தேதி சனிக்கிழமை **காலை 8.00 மணி முதல் 11.30 மணி வரையில் கண்காட்சி** நடைபெறும் இடத்தில் வரவேற்பறையில் மட்டும் பதிவு நடைபெறும். பயன்படுத்திக் கொள்ளுங்கள் மேடையேறும் அனைவருக்கும் ரொக்கப் பரிசு காத்திருக்கின்றது.

*மாணவர்களுக்கான சந்தேகம் மற்றும் ஸ்டால் புக் செய்ய*

**98420 98534**
**63833 51422**
**88381 73645**
**97154 54081**

அதிர்ஷ்டசாலிகளுக்கு
## லேப்டாப் பரிசு



நடப்பு ஆண்டு +2 தேர்வு எழுதியுள்ள மாணவ கண்மணிகள் நேரில் வருவோரின் வருகையை மட்டும் பதிவு செய்து கொண்டு குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் **மூன்று** நபர்களுக்கு மதர் தெரசா கல்வி நிறுவனம் சார்பில் **லேப்டாப்** பரிசளிக்கப்படும்

+2 மாணவ செல்வங்கள் மட்டும் அடையாள அட்டை & ஹால் டிக்கெட் நகல் ஒன்றை கொண்டு வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு **மார்ச் மாதம் 27** -ஆம் தேதிக்கு பிறகு, **வரலாறு** நாளிதழ்

**www.varalaruu.com** இணையதளத்தை பார்க்கவும்.

கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ செல்வங்களுக்கும் **வரலாறு** நாளிதழ் வழங்கும் ஆச்சரியமூட்டும் அன்பளிப்பு காத்திருக்கின்றது.

நிகழ்ச்சியை இணைந்து நடத்துவோர்

SR BLUE METALS / SR புளு மெட்டல்ஸ் | பேக்கரி மஹராஜ் புதுக்கோட்டை | முத்துமீனாட்சி மருத்துவமனை புதுக்கோட்டை | விஜய் நிறுவனங்கள் புதுக்கோட்டை | ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ் | KMS HAKKIM kalyana biriyani PUDUKKOTTAI BRANCH புதுக்கோட்டை